# மறப்பேனா

தென்தமிழீழத்தில் மீன்பாடும் வாவி என்று சிறப்பாக அழைக்கப்படும் ஊர் மட்டக்களப்பு. இம் மண்ணிலே தோன்றிய மாபெரும் உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தன். கவிஞர் பலர் கற்பனை நிகழ்வுகளைத் தமது பாக்களாக உருவகித்துப் பாடுவர். ஆனால் கவிஞர் காசிஆனந்தன் அவர்களோ உண்மை நிகழ்வுகளையும் தனது சொந்தப் பட்டறிவுகளையும் பாவாக்கித் தந்துள்ளார். தன்மண்ணில் அந்நியர் கால் படிந்தால் கொதித்தெழுவார். தம்மண்ணில் வேற்றுமொழி வந்தால் சினந்தெழுவார். எத்தனைமுறை சிறைக்குச் சென்று அடிகள் உதைகள் பட்டாலும் செந்நீர் சிந்தினாலும் தன் மொழிப்பற்றில் தன் நாட்டுப்பற்றில் எள்ளளவும் மாறுபடாதவர். இடிக்காதே காவலரே இடித்தாலும் எந்தன் எலும்போடு தசைமோதித் தமிழ் என்றே கூறும் எனக் கூறியவர் எமது உணர்ச்சிக் கவிஞர். 'செந்தமிழ் நாட்டின் தொண்டனடா காசி சிறைச்சாலை தான் உன் சீதனமடா' என்று பாடப்பட்டவர் கவிஞர் காசிஆனந்தன். அவரது வாழ்நாட்களில் பெரும் பகுதி சிங்களச் சிறைகளிலே தான் கழிந்தது. அவரது செந்நீர் ஆறாக ஓடியதும் அங்கே தான்.

கவிஞரின் பாடல் வரிகள் தூங்கிக் கிடந்த தமிழினத்தை துடித்தெழச் செய்தது. இவர் பல உணர்ச்சிப் பாடல்களை எழுதுவார். இவர் தாய்மொழிப் பற்றும் தாயகப்பற்றும் நிறைந்தவர். இவரது பாடல்கள் உணர்ச்சிப் பாடல்களாக எழுச்சிப் பாடல்களாக அமைந்துள்ளன. இதனால் இவர் உணர்ச்சிக் கவிஞர் என அழைக்கப்படுகின்றார். பட்டினி கிடந்து..... எனத் தொடங்கும் பாடலில் எத்தகைய துன்பத்தைத் தான் அடைந்தாலும் தமிழ் மக்களின் துயரை நீக்க மறக்க மாட்டேன் என்கின்றார். அடுத்து வரும் பாடலில் தான் எப்படி எல்லாம் துயரப்பட்டு இறக்க நேர்ந்தாலும் தாயிலும் இனிய தமிழ் மொழியினைக் காக்க மறக்கமாட்டேன் என்கின்றார். அடுத்து

வரும் பாடலில் பணத்தையும் பதவியையும் காட்டி எதிரிகள் தன்பக்கம் வரச் சொன்னால் அவர்களை வெட்டிவீழ்த்த மறக்கமாட்டேன் என்கிறார். அடுத்து வரும் பாடலில் பொங்கு வெறியரிடம் தான் சிறையில் பட்ட துன்பத்தை வெளிப்படுத்தி இன்னும் அங்கு உடல் பிளக்கும் அளவுக்கு அடித்துக் கொடுமைப்படுத்தினாலும் தொடர்ந்து போர்க்களத்தில் நிற்கப்போவதை நினைத்துச் சிரிப்பேனே தவிரக் கலங்கமாட்டேன் என்கின்றார். இத்தகைய துணிவும் வீரமும் தமிழ்ப்பற்றும் உடைய உணர்ச்சிக் கவிஞர் எங்களுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்பது எமக்குப் பெருமை தான்.